# 11



# நற்பண்புகள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் - 1



பக்குவப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு வாழ்வு எவ்விதமாக அமைய வேண்டும் என்பதை நற்பண்புகள் வரையறை செய்கின்றன. வாழ்வியலின் எல்லாப் பக்கங்களிலும், எல்லா நிலைகளிலும், எப்போதும் அவை பிரதிபலிக்க வேண்டும். ஏனெனில் ஏனைய உயிரி னங்கள் அனைத்திலிருந்தும் வேறுபட்டு நிற்கும் மனிதன், தனித்துவமான உயர் நிலையை அடைவதற்கு இந்த நற்பண்புகளே காரணங்களாக அமைகின்றன.

நற்பண்பு குறித்த இந்த உயர்ந்த நிலை காரணமாகவே வரலாறு நெடுகிலும் நற்பண்பு பற்றிய கருத்துக்களும் சிந்தனைகளும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. உலகில் தோன்றிய சகல சமூகங்களும் நற்பண்புகளுக்குத் தனியான ஓர் இடத்தைக் கொடுத்ததோடு, அந்தந்த சமூகங்கள் நற்பண்பு தொடர்பான செயற்பாடுகளைப் பேணியும் வந்துள்ளன.

அறபு மொழியில் **குலுக் ஹஸன், அக்லாக் ஹஸனா, மகாரிமுல் அக்லாக், அதப், ஆதாப்** முதலான அரபுப் பதங்கள் நற்பண்புகளைச் சுட்டுவதற்காகப் பிரயோகிக்கப் படுகின்றன. நற்பண்புகளுக்கு இஸ்லாம் உயர்ந்த இடத்தை வழங்குகிறது. மனிதன் பெற்றிருக்க வேண்டிய நற்பண்புகளைப் போதிப்பதில் அல்குர்ஆனும் ஸுன்னாவும் பெரும் பங்காற்றுகின்றன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நற்பண்பின் சிகரம் என வருணிக்கும் அல்குர்ஆன், நற்பண்புகளை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இருந்தே கற்றுக்கொள்ளுமாறும் பணிக்கின்றது. நற்பண்புகளால் சிறந்தவர்களே உங்களில் சிறந்தவர்கள் என்ற அல்குர்ஆன் வசனம், நற்பண்பு மிக்கோராய் வாழ்வதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கி நிற்கின்றது.

சிறு வயது முதலே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நற்பண்பு மிக்கவராய் இருந்துள்ளார்கள். அல்-அமீன் என்றும் அஸ்ஸாதிக் என்றும் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் அவர்கள் மக்க ளோடு நற்பண்போடு நடந்துகொண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கைக்கொண்ட நற்பண்புகள் இஸ்லாத்தின் பரம எதிரிகள் கூட இஸ்லாத்தில் இணைந்து அதன் காவலர்களாக மாற வழிவகுத்தன. இஸ்லாம் அரேபியாவிற்கு வெளியே உலகின் பல பிரதேசங்களிலும் பரவுவதற்கு, இஸ்லாம் பயிற்றுவித்த நற்பண்புகளும் காரணமாய் அமைந்தமைக்கு வரலாற்றில் பல சான்றுகளைக் கண்டுகொள்ளலாம்.அல்குர்ஆன், நற்பண்புகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது. ஸூரா லுக்மானிலும், ஸூரா ஃபுர்கானிலும் ஒரு முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய முக்கியமான நற்பண்புகள் சுட்டிக்

காட்டப்பட்டுள்ளன. ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய போதனைகளை ஸூரா லுக்மான் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

அல்லாஹ்வுக்கு எந்த ஒன்றையும் இணை வைக்க வேண்டாம். தொழுகையை நிலைநிறுத்துங்கள். நன்மையை ஏவித் தீமையைத் தடுங்கள். உங்களுக்கு ஏற்படும் அனைத்துத் துன்பங்களின் போதும் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். மனிதர்களை விட்டும் உங்கள் முகத்தைத் திருப்ப வேண்டாம். பூமியில் பெருமையோடு நடக்க வேண்டாம். நடையில் நடு நிலையான தன்மையைக் கடைபிடியுங்கள். சப்தத்தைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். உரத்துக் கத்தும் கழுதையின் சப்தமே சப்தங்களில் வெறுக்கத் தக்கதாகும். (31:12-19)

இதே போன்று ஸூரா ஃபுர்கானில் இறையடியார்களின் பண்புகளைக் கூறுவதனூடாக இஸ்லாம் விரும்பும் நற்பண்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

'அல்லாஹ்வின் நல்லடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள். அறிவீனர்களோடு தர்க்கிக்காமல் கண்ணியமாக விலகிவிடுவார்கள். இரவில் கூடுதலாக இறைவனை வணங்குவார்கள். நரக வேதனையில் இருந்து பாதுகாப்புத் தேடுவார்கள். வீண்விரயமோ, உலோபித்தனமோ இல்லாமல் நடு நிலையில் செலவு செய்வார்கள். அல்லாஹ்வுக்கு இணையாக வேறு எதனையும் அழைக்க மாட்டார்கள். நியாயமின்றி எவரையும் கொலை செய்ய மாட்டார்கள். விபச்சாரம் செய்ய மாட்டார்கள். பொய்யாக எவருக்கும் சாட்சி கூற மாட்டார்கள். வீணான காரியங்களைக் காண நேரிட்டால் கண்ணியமான முறையில் விலகிச் சென்று விடுவார்கள். அல்குர்ஆன் வசனங்களைக் கேட்கும் போது அவர்கள் குருடர்கள், செவிடர்களைப் போல நடந்து கொள்ளமாட்டார்கள். மகிழ்ச்சியான குடும்பத்தை வேண்டிப் பிரார்த்திப்பார்கள்.' (25:63-73)

எனவே நாமும் அல் குர்ஆன், ஹதீஸ் வழி நின்று நற்பண்புகளை அணிகலன்களாகக் கொள்ள முயற்சிப்போமாக!

### பயிற்சி

1. நற்குணம் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.
2. இன்று மாணவர் மத்தியில் நற்பண்பின் அவசியம் குறித்து கலந்துரையாட வேண்டி இருப்பதன் அவசியத்தை எடுத்துக்காட்டுக.
3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரிஸாலத்தைப் பெறுமுன் எத்தகைய நற்பண்புகளைச் சுட்டும் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள் என்பதைக் குறிப்பிடுக.
4. ஸூறா லுக்மானில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நற்பண்புகளைப் பட்டியலிடுக.
5. ஸூறா புர்கானில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நற்பண்புகளைப் பட்டியலிடுக.